முருகப்பெருமான் துணை

துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்**

பாகம்: 1072

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

05.09.2022, திங்கட்கிழமை

1. தர்மபலம் கொண்ட தேசிகனே
தவசியாக வாழும் ஆறுமுக அரங்கனே
பெருமைமிக்க ஞான உலகம் படைக்க
பிரணவக்குடில் படைத்த குருராஜனே
2. அரசனே உந்தனுக்கு சுப்ரமணியர் யானும்
அருளுவேன் ஞான அறிவுரை ஆசி
(சுபகிருது வருடம் ஆவணி மாதம் 20 நாள், 05.09.2022 திங்கட்கிழமை)
வரமென உன் சக்தி கொண்டே
இந்த வையகத்தை ஞானலோகம் ஆக மாற்றம் செய்து
3. செய்துமே உன் தொண்டர் படைகளைக் கொண்டே
சிறப்பான ஞான ஆட்சி உலகிற்கு தருவேன்
மறுப்பின்றி உன்னை ஏற்கின்ற தேசங்களெல்லாம்
மண்ணுலகில் பேரழிவு பேரிடர் என்பது இல்லாத வண்ணம்
4. வண்ணமுடன் பாதுகாப்புக் கூடி
வையகமே பேராற்றல் பட உயரும் நிலைகள் காணும்
காணவே இந்த அற்புதத்தை கலியுகத்தில் அரங்கன் உன்னை கொண்டே
ஞானபண்டிதன் யானும் மாற்றம் செய்ய இருக்க
ஞானிகள் படையும் உந்தன்பால் துணையாய் வர
5. வருகவே உலகோர் உன்னை ஏற்றால் போதும்
வையகத்தில் இந்த பெருமாற்றம்
தடையற ஆறுமுகன் என் செயலாகவே
தர்மமாக தவமாக எங்கும் பரவி
6. பரவியே உலகம் ஞான யுகமாற்றங்காணும்
பழுதில்லா ஞானிகள் ஆட்சிகண்டும்
பாருலகம் ஞானவான்கள் தலைமை கொண்ட
பரிபக்குவ நிலைகொண்ட அன்பர்கள் அதிகார வர்க்கங்களாகி
7. ஆகியே அவர்களெல்லாம் உலகோர் சேமம் குறித்து
ஆற்றல்பட தர்மசேவை ஆற்றும் வண்ணம்
மக்களெல்லாம் மகிழவே இந்த அற்புதத்தை
மகான் சுப்ரமணியர் யானும் அரங்கன் உன்வழி நடத்தி அருள்புரிவேன்
ஞான அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–